# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 04 ( PW– 04 ) |
| **பெயர்** | :– | ராமசந்திரன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

முதல்விசாரணை:-

நான் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், இரும்பாலையில் பணியாளர்கள் குடியிருப்பில் வசிக்கிறேன். இரும்பாலையில் வேலை செய்கிறேன். இறந்துபோன அமிர்தராஜை எனக்குத் தெரியும். அவர் எனக்கு உறவினர். அவர் இறந்த சமயத்தில் மேட்டூரில் Sidco பகுதியில் இரும்பு சன்னல் தயாரிக்கும் பட்டறை வைத்திருந்தார்.

19.12.2017-ஆம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். அமிர்தராஜை வெட்டிபோட்டு விட்டார்கள் என்று எனக்கு தகவல் வந்தது. மேட்டூர் கவேரி Cross தாபா உணவகம்முன் நடந்ததாக சொன்னார்கள். நான் 2.15 மணியளவில் அங்கு சென்றேன். இந்துஸ்தானி தாபாவின் சமயலறையின்முன் கை, கால்கள் மற்றும் தலை பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் அமிர்தராஜ் முகமும் வயிறும் கிழே பார்த்தப்படி கிடந்தார். காவல் துறையினர் அங்கு வந்து விசாரித்தனர்.

மேட்டூர் ராமன்நகரை சேர்ந்த சதீஸ்குமார் என்பவர் ஸ்டாலினிடம் பணம் வாங்கியதாகவும் அந்த பணத்தை சதீஸ்குமார் திரும்பி கொடுக்காமல் வட்டியை அதிகமாக காட்டி சதீஸ்குமாரின் வீட்டை ஸ்டாலின் உரிமை மாற்ற ஆவணம் எழுதி வாங்கி விட்டார் என்றும் அதுச் சம்மந்தமாக பேசுவதற்கு முரளியும் அமிர்தராஜிம் தாபா உணவகத்திற்கு சென்றார்கள் என்றும் அந்த பிரச்சனையில் ஸ்டாலின் கூலி படை வைத்து அமிர்தராஜை வெட்டிவிட்டார் என்றும் அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள். காவல் துறையினர் என்னை விசாரித்தனர். நான் கையெழுத்து போட்டேன்.

**குறுக்கு விசாரணை**

அமிர்தராஜ் என்னுடைய உறவினர் என்பதால் அவருடைய குடும்பம் சம்மந்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அமிர்தராஜின் அத்தை பாக்கியம். பாக்கியத்தின் மகன் வினோத்குமார் என்றால் சரிதான். பாக்கியத்தின் கணவர் பெயர் கோவிந்தன் என்றால் சரிதான். பழனிசாமி மகன் செல்வகணபதி என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். அமிர்தராஜிக்கும் உறவினர் என்றால் சரிதான். என்னை விசாரித்த அன்றுதான் செல்வகணபதியையும், வினோத்குமாரையும் காவல் துறையினர் விசாரித்தனர் என்றால் சரிதான். எனக்கு யார் தகவல் சொன்னது என்று நான் புலனாய்வின்போது சொன்னேனா என்றால் சொன்னேன்.

சதீஸ்குமார் ஸ்டாலினிடம் கடன் வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வழக்குச் சம்பவத்தை நான் பார்க்கவில்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.